# நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 07 ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்டம்.

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம், | **நகர் மன்ற தலைவர்** |
| நந்திவரம்–கூடுவாஞ்சேரி | **நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.** |
| நாள். 07.08.2023 | |

---

**பொருள் எண்.01**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதிகளில் அதனை சுற்றியுள்ள பஞ்சாயத்துகளிலும் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள். நாளுக்குநாள் அதிகஅளவில் பெருகி வருவதோடு வெறிபிடித்த நாய்களால் பொதுமக்களிகளிடையே அச்ச உணர்வு ஏற்பட்டு வருவதோடும் சாலை விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. மேலும் பொது மக்களும் நகர் மன்ற உறுப்பினர்களும் புகார் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.எனவே தெருக்களில் சுற்றி சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திடவும், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது எனவே மேற்கண்ட பணியின் அத்தியாவசியம் கருதிஇந்நகராட்சி நெல்லிக்குப்பம்சாலைப்பகுதியில் அமைந்துள்ள கருத்தடை அறுவை சிகிச்சை மைய கட்டிடத்தில் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி தேவையான உபகரணங்கள் மற்றும் கட்டிட பழுதுப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது அதற்குண்டான செலவினத்தொகை ரூ.9.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 1604/2023/எச்1

**தீர்மானம் எண்.66**

பொருள் எண்.1–ல் மேற்கொள்ள இருக்கும் செலவினங்களை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்று மன்றம் வலியுறுத்தி அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.02**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத பகுதி (ODF+) சான்று வழங்குவது தொடர்பான ஆய்வு 11/7/2023 அன்று மேற்கொள்ளப்பட்டதுஆய்வின் போதுஇந்நகராட்சியில் அமைந்துள்ள பேருந்து நிலைய பொதுக் கழிப்பிடம் மற்றும் மீன் மார்க்கெட் பொதுக்கழிப்பிடம் ஆகிய பொது சுகாதார வளாகங்களில் இரண்டு எரியூட்டும் இயந்திரங்கள் மேற்கண்ட ஆய்வின் அவசர அவசியம் கருதி உடனடியாக வாங்கி வாங்கிட வேண்டியுள்ளதால் நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்குண்டான செலவினத்தொகை ரூ.36,580/– க்குமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் : 1603/2023/எச்1

**தீர்மானம் எண்.67**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.03**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின் மூலம் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுபகுதிகளிலும் வீடுகளில் சேகரிக்கப்படும் தண்ணீர் கலன்கள், கழிவு நீர் தேக்கங்கள், கழிவு நீர் கால்வாய் போன்றவற்றில் டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா மற்றும் இதர நோய்களை பரப்பக்கூடிய கொசுக்கள் மற்றும் கொசுபுழுக்களின் உற்பத்தியை தடுக்கக் கூடிய மருந்துகள் இந்நகராட்சி அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதாலும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், நோய்தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கீழ்கண்ட கொசு ஒழிப்பு மருந்துகளை கொள்முதல் செய்யவேண்டியுள்ளது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டெமிபாஸ் 50% EC (Temephos 50% EC)<br>(கொசு புழு ஒழிப்பு மருந்து) | 50 லிட்டர் |
| 2 | பைரித்ரம் 2% எக்ஸ்ட்ராக்ட் (Pyrethrum 2% Extract) புகைமருந்து | 180 லிட்டர் |
| 3 | பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ்<br>(கழிவு நீர் கால்வாய் கொசு புழு ஒழிப்பு மருந்து) | 200 கிலோ |

மேற்கண்ட முதிர் கொசு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகளை, டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா மற்றும் இதர நோய்களை தடுக்கும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய்தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் : 1605/2023/எச்1

**தீர்மானம் எண்.68**

பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள வாங்கப்படும் பொருட்களை மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் மேலும் முறையாக செய்ய வேண்டும் என்றும் மன்றம் வலியுறுத்தி அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.04**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்வதற்கு தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர் மற்றும் தளவாட சாமான்கள் ஆகியவற்றை பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண் : 1583/2023/எச்1

**தீர்மானம் எண்.69**

சுகாதாரப் பயன்பாட்டிற்கு வாங்கப்படும் பொருட்கள் முறையாக பயன்படுத்துவது இல்லை என்று மன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆகையால் மன்ற உறுப்பினர்களை கொண்ட குழு அமைத்து ப்ளிச்சீங் பவுடர் போன்ற பொருட்களை தினசரி பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.05</u>

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – பொது அலுவலக பயன்பாடு, இந்நகரமன்ற தீர்மான எண். 25 – நாள் 31.03.2023–ல் 5/எண்ணிக்கையிலான குளிரூட்டும் பெட்டி (Air Conditioner) வாங்கிட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 03.07.2023 தேதியில் கோரப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளியில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1 | B. Baskaran | **0.60%** (அதிகம்) |
| 2 | OM. Shakthi Enterprises | **0.60%** (குறைவு) |
| 3 | Ameamu Enterprises | **0. 34%** (அதிகம்) |

எனவே, மேற்க்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திருவா. OM Sakthi Enterprises அவர்களுக்கு அனுமதி பெற்று 4/ எண்ணிக்கையிலான Air Conditioner- கள் வாங்கிட பணி உத்திரவு வழங்கிடவும் பட்டியல் தொகை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.70**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.06</u>

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு 2023–24 ஆம் ஆண்டுக்கு தேவையான படிவங்கள், பாரங்கள், பதிவேடுகள், கணினி பிரிண்டர் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரங்களுக்கான டோனர்கள், இரசீதுகள் அச்சடித்தல் மற்றும் இதர எழுது பொருட்கள் சப்ளை செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.71**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.07**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணைமேயர்கள், மன்றத் தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ள அரசு எண்.98, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13.07.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.72**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.08**

தமிழ்நாடு அரசு ஆணைக்கிணங்க கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கான முகாம் செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் 24.07.2023 முதல் 14.08.2023 வரை தொடர்ந்து 20 நாட்கள் நடைபெற்று வருகிறது. இரண்டு காலகட்டங்களாக நடைபெறும் இம்முகாமில் ஒரு முகாமிற்கு 4 தன்னார்வலர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர், கண்காணிப்பு அலுவலர் மற்றும் எழுத்தர் என ஏழு பேர் வீதம் 11 முகாம்களில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இம்முகாம் நடைபெறுவதற்கு தேவைப்படும் நிர்வாக செலவினங்களான பந்தல் செலவு மற்றும் அம்முகாமில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான சிற்றுண்டி மற்றும் மதிய உணவு செலவு என 20 நாட்களுக்கு தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1593/2023/H1**

**தீர்மானம் எண்.73**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண்.09

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் அவசர அவசியம் கருதி பொதுநிதி பணிகள் 2023–2024 கீழ்கண்ட பணிகளுக்கு பொறியியல் பிரிவு மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.24 லால்பகதூர் சாஸ்திரி தெரு திருப்பூர் குமரன் தெரு முதல் ராஜாஜி தெரு வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 3.50 |
| 2. | வார்டு எண்.16 கூடுவாஞ்சேரி குளம் மேற்குபக்கம் Revetment அமைத்தல். | 9.00 |
| 3. | வார்டு எண்.13 அங்கன்வாடி வளாகத்தில் கூடுதல் அறை கட்டுதல். | 16.0 |
| 4. | வார்டு எண்.3 கூடுவாஞ்சேரி அம்பேத்கர் நகர் குட்டை மேம்பாடு பணிகள் செய்தல். | 25.00 |

| | | |
|---|---|---|
| 5. | வார்டு எண்.5 அமுதம்காலனி சந்திப்பில் தார்சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல். | 7.00 |
| 6. | வார்டு எண்.9 சிற்பிநகர், மோகனப்பிரியா நகர், கே.ஜே.நகர், சிங்காரம் நகர் பகுதிகளில் சிறுபாலங்கள் அமைத்தல். | 20.00 |
| 7. | வார்டு எண்.8 பிரியா நகர் திருமலை நகர், கணபதிநகர் விரிவு, வள்ளலார் நகர் பகுதிகளில் சிறுபாலங்கள் அமைத்தல். | 15.00 |
| 8. | வார்டு எண்.1 அருள்நகர், ஜெகதீஷ்நகர், எம்.ஜி.நகர், நீலன்பள்ளி அருகில், பத்மாவதிநகர் ஆகிய பகுதிகளில் சிறுபாலங்கள் அமைத்தல். | 13.00 |
| 9. | வார்டு எண்.1 ஜெகதீஷ்நகர் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 5.00 |
| 10. | வார்டு எண்.8 பிரியா நகர் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 9.50 |
| 11. | வார்டு எண்.5 மற்றும் 6 மகாலட்சுமிநகர் விரிவு, ஜெயலட்சுமிநகர், சிவா அவின்யூ ஆகிய பகுதிகளில் சிறுபாலங்கள் அமைத்தல். | 40.00 |
| 12. | வார்டு எண்.23 மகாலட்சுமி தெரு பாரதியார் பள்ளி பின்புறம் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 8.50 |
| 13. | வார்டு எண்.5 மகாலட்சுமி நகரில் அமைந்துள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் (மின்விளக்கு, விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி சாதனங்கள், வடிவம் 8 அமைத்தல்). | 5.00 |
| 14. | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள ஜெயலட்சுமிநகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, நெல்லிக்குப்பம் சாலை மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி நந்திவரம் தேரடி மேட்டுத்தெரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஆகியவை புதுப்பித்தல் பணிகள் செய்தல். | 12.00 |
| 15. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் நகராட்சி பொறியியல் பிரிவு, நகரமைப்பு ஆய்வர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோருக்கு தனி அறைகள் ஏற்படுத்துதல் (Aluminium Partition, Water Supply Arrangement, Electrification, Painting, False Ceiling works). | 7.00 |
| 16. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நெல்லிக்குப்பம் சாலையில் இன்டிமேட் பேஷன்ஸ் நிறுவனம் எதிரில் (சியோன் நகர் நுழைவு) சிறுபாலம் கட்டுதல். | 15.00 |
| 17. | நந்திவரம் ஈசா ஏரியில் (சியோன் நகர்) திறந்தவெளி கிணறு, பிரதான விநியோக D.I. பைப்லைன் மற்றும் மின்மோட்டார் அறை அமைத்தல். | 38.00 |
| 18. | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
| 19. | வார்டு எண்.18 நாராயணபுரம் திறந்தவெளி கிணற்றிலிருந்து தேரடி மேட்டுத்தெரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிவரை பிரதான விநியோக D.I. பைப்லைன் அமைத்தல். | 12.00 |
| 20. | வார்டு எண்.18 நாராயணபுரம் திறந்தவெளி கிணற்றை சுற்றி Random Rubble Masonry கட்டுமான பணி செய்தல் மற்றும் மின்மோட்டார் அறை அமைத்தல். | 15.00 |
| 21. | வார்டு எண்.6 ஜெயலட்சுமிநகர் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்தல். | 40.00 |

| | | |
|---|---|---|
| 22. | வார்டு எண்.28 குமரன்நகர் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்தல். | 40.00 |
| 23. | வார்டு எண்.3 பாலாஜி அவின்யூ இரயில்வே டிராக் அருகில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்தல். | 40.00 |
| 24. | கூடுவாஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பராமரிப்பு பணிகள் செய்தல் (கழிவறை, வர்ணம் பூசுதல், நடைபாதை மற்றும் குடிநீர் பணிகள்). | 16.00 |
| 25. | நந்திவரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பராமரிப்பு பணிகள் செய்தல் (கழிவறை, வர்ணம் பூசுதல், நடைபாதை மற்றும் குடிநீர் பணிகள்). | 15.00 |
| 26. | கண்டிகை தாங்கல் மழைநீர் வடிகால்வாய் மற்றம் சிறுபாலம் அமைத்தல் | 25.00 |
| 27. | வார்டுஎண். 29 பங்கஜம்மாள் நகர்–II பூங்கா சுற்றுச்சுவர் அமைத்தல். | 16.00 |
| 28. | வார்டு எண்.7 கற்பகாம்பாள் நகர் எஸ்.எம்.என்.பார்க் பள்ளி தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 5.50 |
| 29. | வார்டு எண்.7 லட்சுமிநகர் பிரதானசாலை சாய்தளம் மற்றும் குறுக்கு தெரு கவர்சிலாப் அமைத்தல். | 4.00 |
| 30. | நந்திவரம் பள்ளிக்கூடத் தெரு, என்.எஸ்.கே தெரு, பாரி தெரு, காமராஜபுரம் முதல் தெரு, குபேரன் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெரு, பாலாஜி தெரு, மகாலட்சுமி தெரு, ராதாகிருஷ்ணன் தெரு, அச்சுதாஸ் தெரு, ஜாகீர் உசேன் தெரு, கோவிந்தராஜபுரம் 1வது தெரு சாய்தளம் அமைத்தல். | 9.00 |

**அ.கு:** மேற்கண்டுள்ள பணிகளை பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.74**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.10</u>

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நந்திவரம் கிராமசாலை நுழைவிடம் மற்றும் கூடுவாஞ்சேரி காமராஜர் தெரு நுழைவிடம் ஆகியவற்றிற்கு நுழைவாயில் அலங்கார தூண்கள் அமைக்க நகராட்சி பொறியாளர் மூலம் உரிய மதிப்பீடுகள் தயாரிக்கவும், பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அ.கு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.75**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.11</u>

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி தரம் உயர்த்தப்பட்டு, ஏற்கனவே இருந்த 18 வார்டுகளை 30 வார்டுகளாக எல்லை மறுவரையறை செய்யப்பட்டு இயங்கிவருகிறது. இந்நகராட்சி 2 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியது. இதன் மொத்த பரப்பளவு 9.00 சதுர கி.மீ.

ஆகும்.  114.10 கி.மீ நீளம் கொண்ட 715 தெருக்களை உள்ளடக்கியது.  இந்நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 44018 மக்கள் தொகையும், தற்போது 75000 மக்கள் தொகையும் கொண்டது.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பொறியாளர் அவர்களால் இந்நகராட்சியில் நடைபெற்றுவரும் பொதுநிதிப்பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆகியவற்றினை அவ்வப்போது தலஆய்வு மேற்கொள்ளவும் மற்றும் உயர் அலுவலர்களது ஆய்வுகூட்டங்களில் கலந்துகொள்ள சென்னை மற்றும் செங்கல்பட்டு செல்லவும் வாகனம் தேவைப்படுகிறது.

தற்போது இந்நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுற்கு நகரமன்றதலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி ஏற்றுள்ளனர்.  நகரமன்ற தலைவர் அவர்களால் நகராட்சி பகுதிகளில் பொதுசுகாதாரம், குடிநீர், மழைநீர் கால்வாய், சாலைவசதிகள் போன்ற அடிப்படைவசதிகள் குறித்து பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் குறித்து நேரடி ஆய்வு மேற்கொள்ளவும் வாகனம் தேவைப்படுகிறது.

மேலும், இந்நகராட்சியில் திட்டப்பணிகளின் கீழ் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம், கலைஞர் நகர்ப்புற மேம்பாடு பணிகள், அறிவுசார் நூலக மையம், நவீன தகன மேடை குளங்கள் அபிவிருத்தி பணிகள், நுண்ணுயிர் உரக்கூடம், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள், சாலைப்பணிகள், திறந்தவெளி கிணறுகள் அமைத்தல் பணி, குடிநீர் பணிகள் ஆகியவற்றினை தினசரி நேரில் பார்வையிட்டு பணிகளை கண்காணிக்க வேண்டியுள்ளது.

எனவே  நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியின் பொறியாளருக்கு Bolero ஈப்புவாகனம் ஒரு எண்ணிக்கை தேவைப்படுகிறது. எனவே மேற்காணும் விவரப்படி Bolero வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குவதற்கும், மேற்படி செலவினத் தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.
**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.76**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.12</u>

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி சென்னைக்கு அருகாமையில் வேகமாக வளர்ந்துவரும் நகராட்சியாகும்.  இந்நகராட்சி 08.50 சதுர கிலோ மீட்டரில்  30 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 44098 ஆகும். இதில் 17150 குடியிருப்புகள், 835 தெருக்கள், 3 தொழிற்சாலைகள் மற்றும் 712 வணிகம் அமைந்துள்ளது. சாலையின் மொத்த நீளம் 110.04 கி.மீ ஆகும்.

இந்நகராட்சியில் 30 வார்டுகளில் 18 வார்டு பகுதிகளுக்கு மாமண்டூர் பாலாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 6.00 இலட்சம் லிட்டர்கள் மற்றும் பெருமாட்டுநல்லூர் திறந்தவெளி கிணறுகள் திட்டத்தின்கீழ் தினசரி 13.00 இலட்சம் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.  ஏனைய 12 வார்டு பகுதிகளுக்கு உள்ளூர் நீராதாரங்கள் மூலம் 98 பவர் பம்புகள், 125 கைப்பம்புகள், 12 பொது கிணறுகள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 12.00 இலட்சம் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு ஆக மொத்தம் 31.00  இலட்சம் (70 LPCD) குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.   மேலும் 11 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (RO Plant) 10 வார்டுகளில் தினந்தோறும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.  2 எண்ணிக்கை குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் குழாய் இல்லாத பகுதிகளுக்கு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

மேலும் அனைத்து வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், தற்போதைய மக்கள் தொகை பெருக்கம் மற்றும் எதிர்வரும் காலங்களில் மக்கள் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளதை கணக்கில் கொண்டு இந்நகராட்சியிலிருந்து சுமார் 9 கிலோ மீட்டர்

தொலைவிலுள்ள கீரப்பாக்கம் ஊராட்சியிலுள்ள கைவிடப்பட்ட நிலையில் உள்ள குவாரியின் நீரினை குடிநீருக்காக பயன்படுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி, நகரமன்ற தலைவர், நகராட்சி ஆணையர், தமிழ்நாடு குடிநீர் வாடிகால் வாரிய அதிகாரிகள், தாசில்தார் மற்றும் கனிமவளத் துறை அலுவலர்கள் ஆகியோருடன் நேராய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேற்படி குவாரி நீரின் BOD மற்றும் COD ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதில் குடிநீருக்கு உகந்தது என அறிக்கை பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி குவாரி நீரை சுத்திகரிப்பு செய்து பொதுமக்களின் குடிநீர் ஆதாரத்திற்கு பயன்படுத்தும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திட்ட ஆலோசகர் மூலம் நில அளவீடு, வடிவமைத்தல், கீரப்பாக்கம் குவாரியில் உள்ள நீரின் பகுப்பாய்வு செய்தல், விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தோரய மதிப்பீடு ரூ.**40.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.77**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.13</u>

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமிராக்கள் (CCTV) பழுதடைந்துள்ளதை தொடர்ந்து அதனை பழுதுநீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.78**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.14</u>

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–2023ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 31.05.2023 புதன்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1. | வார்டு எண்.1 கல்பனா சாவ்லா தெரு, சேரன் குறுக்கு தெரு, மீனாட்சி நகர் பைப்லைன் விரிவாக்கம் செய்தல் | 6.00 | J.ராஜேஸ்வரி | – | 0.03% | J.ராஜேஸ்வரி |
| | | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 2.65% | – | |
| 2. | வார்டு எண்.2 ராகவேந்திரா கானி பூங்காவில் உள்ள 2 எண்ணிக்கை கிணறுகளில் நீர் அகற்றுதல் 5HP மோட்டார் அமைத்து பைப்லைன் விரிவாக்கபணிகள் செய்தல் | 7.50 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.01% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.71% | – | |
| 3. | வார்டு எண்.4 பாலாஜி அவின்யூ காந்தி பூங்கா பொதுகிணற்றில் | 7.50 | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | – | 0.04% | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தண்ணீர் அகற்றும் பணி, □□□□□□□□□□□□ பணி (Desilting Work), மற்றும் சிறுமின்விசை 7.50 HP பம்பு அமைத்தல் | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 2.96% | – | |
| 4. | வார்டு எண்.5 மகாலட்சுமிநகர் பைப்லைன் விரிவாக்கம் செய்தல் | 6.65 | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | – | 0.06% | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் |
| | | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 3.45% | – | |
| 5. | வார்டு எண்.6 ஜெயலட்சுமிநகர் மற்றும் அமுதம்காலனி பைப்லைன் விரிவாக்கம் செய்தல் | 6.80 | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | – | 0.02% | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் |
| | | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 2.79% | – | |
| 6. | வார்டு எண்.8 வள்ளலார் நகர், பத்மாவதி நகர் மற்றும் கணபதிநகர் பைப்லைன் விரிவாக்கம் செய்தல் | 6.50 | J.ராஜேஸ்வரி | – | 0.01% | J.ராஜேஸ்வரி |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 3.45% | – | |
| 7. | வார்டு எண்.17 மரகதம் சந்திரசேகர் தெரு பைப்லைன் விரிவாக்கம் செய்தல் | 3.00 | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | – | 0.04% | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் |
| | | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 2.16% | – | |
| 8. | வார்டு எண்.19 வள்ளுவர்காலனி, ராஜிவ் காந்தி நகர், மாவீரன் நேதாஜி தெரு, காமராஜ் தெரு, திருவள்ளுவர் தெரு பைப்லைன் விரிவாக்கம் செய்தல் | 10.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.06% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 1.78% | – | |
| 9. | பாலாஜி தெரு முதல் நெல்லிக்குப்பம் சாலை சந்திப்பு வரை(D.I.Pipe) பிரதான பைப்லைன் அமைத்தல். | 6.85 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.08% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.99% | – | |
| 10. | நந்திவரம் ஈசா ஏரியில் திறந்தவெளி கிணறு (நாராயணபுரம்) அமைத்தல் | 10.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.10% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.72% | – | |

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | அதிகம் | |
| 11. | நந்திவரம் ஈசா ஏரியில் திறந்தவெளி கிணறு (சியோன்நகர்) அமைத்தல் | 10.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.10% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.87% | – | |
| 12. | வார்டு எண். 23 சாமிநாதன் தெரு மற்றும் வார்டு எண். 21 2வது தெரு, 3வது தெரு, 4 வது தெரு பைப் லைன் விஸ்தீரிப்பு பணிகள் | 6.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.07% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 3.62% | – | |
| 13. | Providing Supply, Delivery and Laying of Copper Cable 3 Core 6.00 Sq.mm, 4 Core 120.00 Sq.mm, 40HP Start Delta Starter to Perumattunallur (Old Scheme) & Perumattunallur (New Scheme) Head works | 7.50 | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | – | 0.05% | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் |
| | | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 2.65% | – | |
| 14. | வார்டு எண்.14 வி.ஏ.ஓ அலுவலகம் பின்புறம் புதிய ஆழ்துளை கிணறு | 6.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.02% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமைத்து பைப்லைன் விரிவாக்கபணிகள் செய்தல் | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.47% | – | |
| 15. | வார்டு எண்.2 ராகவேந்திரா காலனி பூங்காவில் உள்ள 2 எண்ணிக்கை கிணறுகளில் நீர் அகற்றுதல் 5HP மோட்டார் அமைத்து பைப்லைன் விரிவாக்கபணிகள் செய்தல் | 6.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.01% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 3.45% | – | |
| 16. | வார்டு எண்.9 கே.ஜே.நகர் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து பைப்லைன் விரிவாக்கபணிகள் செய்தல் | 10.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.06% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.70% | – | |
| 17. | வார்டு எண்.26 மீனாட்சி நகர் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து பைப்லைன் விரிவாக்கபணிகள் செய்தல் | 6.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.08% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | 2.35% | – | |
| 18. | வார்டு எண்.29 பங்கஜம்மாள் நகர் பூங்காவில் உள்ள பொதுகிணற்றில் நீர் அகற்றுதல் 5HP மோட்டார் அமைத்து பைப்லைன் விரிவாக்கபணிகள் செய்தல் | 5.00 | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் | – | 0.10% | ஜே.பி. எஸ் எண்டர்பிரைசஸ் |
| | | | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 3.43% | – | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2022/இ1**
**நாள்.31.05.2023**

**தீர்மானம் எண்.79**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.15**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–2023ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 22.06.2023 வியாழக்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் தெரு மின்விளக்கு, உதிரி பாகங்கள் விநியோகம் செய்தல் பணி | 9.50 | ஸ்ரீ சீனிவாசா எலக்ட்ரிகல்ஸ் | – | 0.06% | ஸ்ரீ சீனிவாசா எலக்ட்ரிகல்ஸ் |
| | | | ஸ்ரீ வசந்தகுமார் அண்டு கோ | 2.15% | – | |
| 2 | நகராட்சி அலுவலக | 6.00 | ஸ்ரீ சீனிவாசா எலக்ட்ரிகல்ஸ் | – | 0.04% | ஸ்ரீ சீனிவாசா |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு 35KVA திறன்கொண்ட ஜெனரேட்டர் கொள்முதல் செய்தல் | | ஸ்ரீ வசந்தகுமார் அண்டு கோ | 2.75% | – | எலக்ட்ரிகல்ஸ் |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 614/ 2023/இ1**
**நாள்.22.06.2023**

**தீர்மானம் எண்.80**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.16**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி **2023–2024**ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள **30.06.2023** வெள்ளிக்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | Conversation of Earthen to BT surface to Ward No.8 Kanagi Street 2nd Street (178008R245), Kanniyappa Nagar 1st Street (178008R255), Kanniyappa Nagar 2nd Street (178008R256), Ganapathy Nagar Extn II 4th Street (178008R217), Ward No.29 Pankajammal Nagar-1 1st Street (178029R718), Pankajammal Nagar Extn-2 1st Street (178029R720), Pankajammal Nagar Extn-2 2nd Street (178029R721), Pankajammal Nagar Extn-2 2nd Cross Street (178029R722), Ward No.30 Radha Nagar 3rd Street (178030R765), Zion Nagar Main Road (178030R766), Zion Nagar 1st street (178030R767), Zion Nagar 1st Cross Street (178030R768), Zion Nagar 2nd street (178030R769) in Nandhivaram-Guduvancheri Municipality | 54.00 | VDPஅசோக் குமார் காண்ட்ராக்டர் | - | 0.05% | VDPஅசோக் குமார் காண்ட்ராக்டர் |
| | | | L.புண்ணியகோட்டி | 4.53% | - | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.982 /2023/இ1**
**நாள்.05.07.2023**

**தீர்மானம் எண்.81**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.17**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி 2023–2024ஆம் ஆண்டு **6TH STATE FINANCE COMMISSION AREAR** கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள 14.07.2023 வெள்ளிக்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | Relaying of BT Road at Amudham Colony Extn 178006R333, Jayalakshmi Nagar 2nd Street 178006R209, Amudham Colony Park Street 178006R325, Radhakrishnan Nagar Main Road 178006R145, Abbey Avenue 1st Street 178006R349, Siva Avenue 1st Street 178006R335, Jayalakshmi Nagar 1st Street North Side 1st Cross 178006R316, Amudham Colony 1st Street 178006R324in Nandhivaram-Guduvancheri Municipality | 35.00 | VDPஅசோக் குமார் கான்ட்ராக்டர் | - | 0.08% | VDPஅசோக் குமார் கான்ட்ராக்டர் |
| | | | L.புண்ணியகோட்டி | 3.24% | - | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.982 /2023/இ1**
**நாள்.17.07.2023**

**தீர்மானம் எண்.82**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.18**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–2023ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 18.07.2023 செவ்வாய்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | Construction of RCC Minor Bridge at Ward No.5 Mahalaskhmi Nagar 21st Street | 19.80 | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் | – | 0.02% | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் |
| | | | ஸ்ரீ குஹான் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 3.65% | – | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2022/இ1**
**நாள்.19.04.2023**

**தீர்மானம் எண்.83**

பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.19**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–24ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 19.07.2023 புதன்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | Supply of 120 Watts LED Street Light Fitting at GST Cross Streets | **19.80** | VDP அசோக் காண்டிராக்டர் | – | 0.02% | VDP அசோக் காண்டிராக்டர் |
| | | | L.வெங்கடேசன் | 2.66% | – | |
| 2 | Supply of 150 Watts LED Street Light Fitting with OCTAGONAL 8 Mtr POST at Nandhivaram Main Road | **15.00** | ஸ்ரீநிவாசா எலக்ட்ரிகல்ஸ் | – | 0.09% | ஸ்ரீநிவாசா எலக்ட்ரிகல்ஸ் |
| | | | வசந்தகுமார் ௲ கோ | 3.74% | – | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2023/இ1**
**நாள்.19.07.2023**

**தீர்மானம் எண்.84**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.20</u>**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி **2023–2023**ன் கீழ் மன்ற அனுமதி பெற்று **20.07.2023** வியாழக்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | நந்திவரம் சுடுகாடு, புரனமைப்பு (மின் விளக்குகள், பசுமை மரக்கன்றுகள் குடிநீர் வசதி) பணிகள் செய்தல் | 18.00 | P.எத்திராஜன் | – | 0.02% | P.எத்திராஜன் |
| | | | L.வெங்கடேசன் | 2.26% | – | |
| 2 | நந்திவரம் காலனி சுடுகாடு புரனமைப்பு (மின் விளக்குகள், பசுமை மரக்கன்றுகள் குடிநீர் வசதி) பணிகள் செய்தல் | 15.00 | L.புண்ணியகோட்டி | – | 0.03% | L.புண்ணியகோட்டி |
| | | | L.வெங்கடேசன் | 3.42% | – | |
| 3 | கூடுவாஞ்சேரி காலனி சுடுகாடு ஆகியவற்றில் புரனமைப்பு (மின் விளக்குகள், பசுமை மரக்கன்றுகள் குடிநீர் வசதி) பணிகள் செய்தல் | 7.00 | T.ராமச்சந்திரன் | – | 0.05% | T.ராமச்சந்திரன் |
| | | | P.எத்திராஜன் | 2.33% | – | |
| 4 | கே.கே. நகர் சுடுகாடு ஆகியவற்றில் புரனமைப்பு (மின் விளக்குகள், பசுமை மரக்கன்றுகள் குடிநீர் வசதி)பணிகள் செய்தல் | 7.00 | L.புண்ணியகோட்டி | – | 0.03% | L.புண்ணியகோட்டி |
| | | | L.வெங்கடேசன் | 3.67% | – | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2022/இ1**
**நாள்.19.04.2023**

**தீர்மானம் எண்.85**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.21**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத பகுதி (ODF+) சான்று வழங்குவது தொடர்பான ஆய்வு 11/7/2023 அன்று மேற்கொள்ளப்பட்டதுஆய்வின் போதுஇந்நகராட்சியில் அமைந்துள்ள பேருந்து நிலைய பொதுக் கழிப்பிடம் மற்றும் மீன் மார்க்கெட் பொதுக்கழிப்பிடம் ஆகிய பொது சுகாதார வளாகங்களில் இரண்டு எரியூட்டும் இயந்திரங்கள் மேற்கண்ட ஆய்வின் அவசர அவசியம் கருதி உடனடியாக வாங்கி வாங்கிட வேண்டியுள்ளதால் நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்குண்டான செலவினத்தொகை ரூ.36,580/– க்குமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க. எண் : 1603/2023/எச்1**

**தீர்மானம் எண்.86**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.22**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின் மூலம் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுபகுதிகளிலும் வீடுகளில் சேகரிக்கப்படும் தண்ணீர் கலன்கள், கழிவு நீர் தேக்கங்கள், கழிவு நீர் கால்வாய் போன்றவற்றில் டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா மற்றும் இதர நோய்களை பரப்பக்கூடிய கொசுக்கள் மற்றும் கொசுபுழுக்களின் உற்பத்தியை தடுக்கக் கூடிய மருந்துகள் இந்நகராட்சி அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதாலும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், நோய்தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கீழ்கண்ட கொசு ஒழிப்பு மருந்துகளை கொள்முதல் செய்யவேண்டியுள்ளது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டெமிபாஸ் 50% EC (Temephos 50% EC)<br>(கொசு புழு ஒழிப்பு மருந்து) | 50 லிட்டர் |
| 2 | பைரித்ரம் 2% எக்ஸ்ட்ராக்ட் (Pyrethrum 2% Extract) புகை மருந்து | 180 லிட்டர் |
| 3 | பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ்<br>(கழிவு நீர் கால்வாய் கொசு புழு ஒழிப்பு மருந்து) | 200 கிலோ |

மேற்கண்ட முதிர் கொசு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகளை, டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா மற்றும் இதர நோய்களை தடுக்கும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய்தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் தமிழ்நாடு மருத்துவ சேவை கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க. எண் : 1605/2023/எச்1**

**தீர்மானம் எண்.87**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.23</u>**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்வதற்கு தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு:** மேற்கண்டசெலவினத்தைபொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க. எண் : 1583/2023/எச்1**

**தீர்மானம் எண்.88**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.24</u>**

தமிழ்நாடு அரசு ஆணைக்கிணங்க கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கான முகாம் செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் 24.07.2023 முதல் 14.08.2023 வரை தொடர்ந்து 20 நாட்கள் நடைபெற்று வருகிறது. இரண்டு காலகட்டங்களாக நடைபெறும் இம்முகாமில் ஒரு முகாமிற்கு 4 தன்னார்வலர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர், கண்காணிப்பு அலுவலர் மற்றும் எழுத்தர் என ஏழு பேர் வீதம் 11 முகாம்களில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இம்முகாம் நடைபெறுவதற்கு தேவைப்படும் நிர்வாக செலவினங்களான பந்தல் செலவு மற்றும் அம்முகாமில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான சிற்றுண்டி மற்றும் மதிய உணவு செலவு என 20 நாட்களுக்கு தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 1593/2023/H1**

**தீர்மானம் எண்.89**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.25</u>**

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.48, நாள்:17.06.2022ன்படி இந்நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை தூய்மைபணி மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முறை மூலம் சப்ளை செய்வதற்கு செப்டம்பர்– அக்டோபர் 2023, வரை உள்ள காலத்திற்கு M/S ட்ரீம்வே யுட்டிலிட்டி அண்ட் டெவலப்மெண்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு நீடிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.90**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண் : 26</u>**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பணிகள், தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு தூய்மை பணியாளர் பொது நலன் கருதி துரித வேகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் மேற்காணும் பொது சுகாதார பணிகளுக்குண்டான ஒப்பந்தப்பணிகள் மார்ச்–31–2022ல் முடிவடைந்தது. நகர்புற உள்ளாட்சி தேர்தல் முடிந்து நகரமன்ற கூட்டம் நடைபெற்ற குறுகிய காலத்தில் புதிய ஒப்பந்த புள்ளி கோர இயலாத சூழ்நிலை இருந்ததால் தூய்மைப்பணியின் தொடர் அவசியம் மற்றும் இதர பணிகளின் அவசியம் கருதி, தற்போது ஒப்பந்த பணி மேற்கொண்டு வரும் கீழ்காணும் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கிய அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள நகரமன்ற ஒப்புதலுடன் ஏப்ரல், மே மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது கீழ்காணும் பணிகளுக்கு புதிய ஒப்பந்த புள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் உரிய அனுமதி வழங்க கோரி முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொது சுகாதார பணி மற்றும் இதர பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி நிர்வாக இயக்குநர் வழங்கிய அறிவுரையின் படி, உரிய அனுமதி பெற்று புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை பணியின் அவசியம் கருதி ஆகஸ்டு – 2022, செப்டம்பர்– 2022 மற்றும் அக்டோபர்–2022 ஆகிய மாதங்களுக்கு இந்நகரமன்ற தீர்மான எண்.67 நாள்: 01.08.2022ல் அனுமதி வழங்கப்பட்டு கீழ்க்கண்ட வ.எண். 01 முதல் 09 வரையுள்ள பணிகளுக்கு மேலும் காலநீட்டித்து நவம்பர் – 2022 முதல் ஜனவரி 2023 வரை பணி மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய ஒப்பநத்புள்ளி கோர நிர்வாக காரணங்களால் காலதாமதம் ஆவதால் மேலும், பிப்ரவரி – 2023 (ம) மார்ச் – 2023 ஆகிய இரு மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கப்பட்டு மேலும், ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆவதால் ஏப்ரல் –2023 (ம) மே–2023 ஆகிய இரு மாதங்களுக்கு பராமரிப்பு பணி கால நீட்டிப்பு இந்நகரமன்ற தீர்மான எண்.47 நாள் 31.03.2023–ல் நீட்டிப்பு செய்து தற்போது கீழ்க்கண்ட அட்டவணைகளில் உள்ள பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆவதால் மேலும் மூன்று மாதங்கள் (ஜூன் 2023 முதல் ஆகஸ்ட்டு 2023 வரை) கால நீட்டிப்பு செய்யப்பட்டு மேலும், ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆவதால் செப்டம்பர் 2023 முதல் அக்டோபர் 2023 வரை இரண்டு மாதங்களுக்கு வரிசை எண் 1 மற்றும் 7–ல் உள்ள பணிகளுக்கும் , வரிசை எண் 2–ல் உள்ள பணிக்கும் செப்டம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை கால நீட்டிப்பு செய்து மற்றும் வரிசை எண்:–3,4,5,6,8,9,10 உள்ள பணிகளுக்கு செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|
| 1 | Out Sourcing of 55 Nos of Non power for Dengu Breathing control Activities for 30 day at Nandivaram-Guduvancheri Municipality | Bluee Gold Solutions | (செப்டம்பர் 2023 முதல் அக்டோபர் 2023 வரை) |

| | | | |
|---|---|---|---|
| 2 | Outsourcing of 41-Nos of Non-Power for Computer Operation, Office Assistant, Driver, Street Light Maintenance, Water Supply Maintenance and Cleanliness work for 30- days at Nandivaram-Guduvancheri Municipality. | Bluee Gold Solutions | (செப்டம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை) |
| 3 | ஆண்டு ஒப்பந்தம்–நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி –2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள் மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.10 முதல் 18 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தபடி மேற்கொள்ளுதல். | M/s. குமரன் எலக்ட்ரிகல்ஸ் | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |
| 4 | ஆண்டு ஒப்பந்தம் – நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி – 2021–22ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள், மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.01 முதல் 09 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தப் பணி மேற்கொள்ளுதல் | திரு.L. புன்னியகோட்டி | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |
| 5 | ஜே.சி.பி வாகனம் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |
| 6 | திடக்கழிவுகள் அகற்றுவதற்க்காக டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |
| 7 | வார்டு எண்–9,10 மற்றும் 11 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | (செப்டம்பர் 2023 முதல் அக்டோபர் 2023 வரை) |
| 8 | வார்டு எண்–2,3 மற்றும் 4 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | திரு.L.வெங்கடேசன் | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |
| 9 | வார்டு எண்–15,16 மற்றும் 23 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | திரு. L.புன்னியகோட்டி | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |

| | | | |
|---|---|---|---|
| 10 | வார்டு எண்–24, 25 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | திரு. L.வெங்கடேசன் | (செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை) |

மேற்க்கண்ட வ.எண்.01 முதல் 10 வரையிலான பராமரிப்பு ஒப்பந்தப்பணிகள் பழைய விலை விகிதத்திலேயே ஒப்பந்த கால நீட்டிப்பு ஆனது நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.91**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.27</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான சாலைகளிலும், தெருக்களிலும் பொதுமக்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் சாலை விபத்துக்கள் ஏற்படுத்தும் விதமாகவும் சுற்றி திரியும் மாடுகளைப் பிடித்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது, இது குறித்து பொதுமக்களிடமிருந்தும், நகரமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது இந்நகராட்சியில் பணியாளர் பற்றாக்குறையாக உள்ளதாலும் மாடுகளைப் பிடிக்க போதிய பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் பயிற்சி பெற்ற பணியாளர்கள்கொண்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து ஒரு மாடு பிடிக்க ஆகும் செலவினத்திற்கு விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.92**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.28</u>

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி தரம் உயர்த்தப்பட்டு, ஏற்கனவே இருந்த 18 வார்டுகளை 30 வார்டுகளாக எல்லை மறுவரையறை செய்யப்பட்டு இயங்கிவருகிறது. இந்நகராட்சி 2 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியது. இதன் மொத்த பரப்பளவு 9.00 சதுர கி.மீ. ஆகும். 114.10 கி.மீ நீளம் கொண்ட 715 தெருக்களை உள்ளடக்கியது. இந்நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 44018 மக்கள் தொகையும், தற்போது 75000 மக்கள் தொகையும் கொண்டது.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பொறியாளர் அவர்களால் இந்நகராட்சியில் நடைபெற்றுவரும் பொதுநிதிப்பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆகியவற்றினை அவ்வப்போது தலஆய்வு மேற்கொள்ளவும் மற்றும் உயர் அலுவலர்களது ஆய்வுகூட்டங்களில் கலந்துகொள்ள சென்னை மற்றும் செங்கல்பட்டு செல்லவும் வாகனம் தேவைப்படுகிறது.

தற்போது இந்நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுற்கு நகரமன்றதலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி ஏற்றுள்ளனர். நகரமன்ற தலைவர் அவர்களால் நகராட்சி பகுதிகளில்

பொதுசுகாதாரம், குடிநீர், மழைநீர் கால்வாய், சாலைவசதிகள் போன்ற அடிப்படைவசதிகள் குறித்து பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் குறித்து நேரடி ஆய்வு மேற்கொள்ளவும் வாகனம் தேவைப்படுகிறது.

மேலும், இந்நகராட்சியில் திட்டப்பணிகளின் கீழ் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம், கலைஞர் நகர்ப்புற மேம்பாடு பணிகள், அறிவுசார் நூலக மையம், நவீன தகன மேடை குளங்கள் அபிவிருத்தி பணிகள், நுண்ணுயிர் உரக்கூடம், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள், சாலைப்பணிகள், திறந்தவெளி கிணறுகள் அமைத்தல் பணி, குடிநீர் பணிகள் ஆகியவற்றினை தினசரி நேரில் பார்வையிட்டு பணிகளை கண்காணிக்க வேண்டியுள்ளது.

எனவே நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியின் பொறியாளருக்கு Bolero ஈப்புவாகனம் ஒரு எண்ணிக்கை தேவைப்படுகிறது. எனவே மேற்காணும் விவரப்படி க்ஷடிடநசடி வாகனம் ஒரு எண்ணிக்கை வாங்குவதற்கும், மேற்படி செலவினத் தொகையினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.93**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண்.29</u>

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (RO Plant) பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பொதுநிதி பணிகள் 2023–2024 கீழ்கண்ட பணிகளுக்கு பொறியியல் பிரிவு மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கவும், 9 மாதங்கள்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் வார்டு எண்.15 பகுதியில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் (RO Plant) ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணி செய்தல் (01.09.2023' முதல் 31.05.2024) | 20.00 |
| 2. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் வார்டு எண்.30 பகுதியில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் (RO Plant) ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணி செய்தல் (01.09.2023' முதல் 31.05.2024) | 20.00 |

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.777/2023/இ1**

**தீர்மானம் எண்.94**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண்.30

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியானது, பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தி பின்னர் இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு, நமக்கு நாமே திட்டம், கலைஞர் நகர்புர மேம்பாட்டு திட்டம், Swachh Bharat Mission (Urban) 2.0 மற்றும் பொதுநிதியின் கீழ்பல்வேறு வளர்ச்சிபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யவும், மேற்பார்வையிடவும், திட்டப்பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்று வரவும், மற்றும் வளர்ச்சி பணிகள் தொடர்பான இதர பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு உத்தேசமாக 5 எண்ணிக்கை தொழில்நுட்ப உதவியாளர்களை வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒரு வருடத்திற்கு (01.09.2023 முதல் 31.08.2024 வரை) தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையின் 2023–24 ஆம் ஆண்டிற்கான அட்டவணை விலைப்படி ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 777/2023/ இ1**

**தீர்மானம் எண்.95**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண்.31

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு வழங்கும் திட்டம் 2022–2023–ன் கீழ் காமராஜபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நந்திவரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி மேற்கொள்ள 18.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒரு நபருக்கு ரூ.12.70/– என குறைவாக விலை விகிதம் வழங்கிய திருவா.ஸ்ரீ முருகன் கிட்சன் என்ற நிறுவனத்திற்கு 29.08.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.இப்பணி துவங்கப்பட்டு 28.08.2023 அன்று ஒரு வருட பணி காலம் முடிவடையவுள்ளது. மேலும் இரண்டாம் கட்டமாக கூடுவாஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி மேற்கொள்ள 10.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 13.02.2023 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் இரண்டு கட்டமாக செயல்படுத்திய நான்கு பள்ளிகளுக்கு இரண்டு கோப்புகளாக பராமரிக்கப்பட்டுவருகிறது. எனவே நான்கு பள்ளிகளுக்கும் ஒரே கோப்புகளாக கையாளும் வகையில் முதற்கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு 28.08.2023 அன்று முடிவடையவுள்ளதால், இரண்டாம் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளின் ஒப்பந்தப்புள்ளி காலம் முடிவடையும் வரையில் முதற்கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கும் கால நீட்டிப்பு செய்து முன்னதாக பணி மேற்கொள்ளப்பட்ட திருவா.ஸ்ரீ முருகன் கிட்சன் என்ற நிறுவனம் மூலம் முன்னர் வழங்கிய விலை விகிதத்தில் இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண் : 973/2022/இ1**

**தீர்மானம் எண்.96**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண்.32

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி 2023–24ஆம் ஆண்டு மாநில பேரிடர் வெள்ளதடுப்பு நிதி திட்டத்தின் **(SDMF 2023-2024)** கீழ் 03.05.2023 புதன் கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | 5வது வார்டு மகாலட்சுமிநகர் மற்றும் 6வது வார்டு அமுதம்காலனி வடிகால்வாய் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 534.00 | M/S Jayaram Ventures, Old No.19, New No.09, Dr.Radhakrishnan Salai, 8th Street, Mylapore, Chennai-600 004 | - | 0.03% | M/S Jayaram Ventures, Old No.19, New No.09, Dr.Radhakrishnan Salai, 8th Street, Mylapore, Chennai-600 004 |
| | | | M/S Skyline Constructions, No. 19/09, 8th Street, Dr. R K Salai, Mylapore, Chennai-600 004 | 0.77% | - | |

**அலுவலக குறிப்பு:** மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மன்ற M/S Jayaram Ventures, என்ற நிறுவனத்திற்கு அனுமதியை எதிர்நோக்கி பணியாணை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.825/2023/இ1**
**நாள்.03.05.2023**

**தீர்மானம் எண்.97**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

ஓம்/M.K.D. கார்த்திக்
நகர்மன்ற தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி